# விடியல்

மாத இதழ், பொழுது – 20
புரட்டாசி – ஐப்பசி
அக்டோபர் – 2010
vidiyalmagazhine.blogspot.com
vidiyalmagazhine@gmail.com

சிறப்பாசிரியர்
முனைவர் நா. கண்ணன்
கல்லூரி முதல்வர்

ஆசிரியர்
முனைவர் மா. கார்த்திகேயன்
தமிழ்த்துறைத் தலைவர்

இணை ஆசிரியர்
திரு. ப. சரவணன்
தமிழ் விரிவுரையாளர்

ஆசிரியர் குழு
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்

வெளியீடு:

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA

தமிழ்த்துறை,
கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 215, தமிழ்நாடு, இந்தியா.
www.ksrcasthamizh.blogspot.com, www.ksrcas.net.

## உள்ளடக்கம்

o ருத்ராட்சம், விசித்திர மழலை 02
o கட்டுரைகள்
  இயற்கையைப் போற்றுவோம் 02
  விருந்தும் வீரமும் 07
  பெண் சுதந்திரம் 09
  சிறுமிகள் பாதுகாப்பு 11
  பாலிகிராப் 14
  மாமனிதர் மாசேதுங் 16
o எழுத்தாளர் அறிமுகம்
  ஏர்நெஸ்ட் ஹெமிங்வே 05
o இளமையில் வெல்க 06
o கவிதை : பெண்சிசு கொலை 08
o மருத்துவம் : ஆவாரம் பூவே… 10
o புகழ்பெற்ற பாடல் அடிகள் 11
o இணையம் பிறந்த கதை 13
o தொடர்கட்டுரை (பகுதி - 2)
  மக்கள் தலைவர் கே.எஸ்.ஆர். 17
o தொடர் செய்யுள் (பகுதி - 4)
  கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ் 19
o வாழ்த்து, கருத்துமடல், நிகழ்வு 20

## ருத்ராட்சம்

சிவபெருமானின் (ருத்ரன்) கண் களிலிருந்து இரக்கத்தால் கசிந்த கண்ணீர்த் துளிகளிலிருந்து உருவானவை ருத்ராட்சங்கள். முற்றிய ருத்ராட்சத்தைத் தேனில் குழைத்து சாப்பிட்டால் தீராத காய்ச்சல் தீரும் என்று தேரையார் வாகடம் சொல்கிறது. முற்றிய மாற்றுமிக்க ருத்ராட்சமணி மீது செப்புக் காசினை வைத்தால் அந்தச் செப்புக்காசு சுழலும். ருத்ராட்சத்திலிருந்து வெளிப்படும் மின் சக்தியே அவ்வாறு சுழலச் செய்கிறது. ருத்ராட்சத்தின் மீது பட்ட நீர் உடல்மீதும் படுவதால் ஆரோக்கியம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ருத்ராட்ச மணிகள் யோகிகள் மட்டுமல்ல சாதாரண மனிதர்கள் அணிந்தாலும் அவை நன்மை பயக்கக் கூடியதே. - **ஜி. காயத்ரி,** இளங்கலை கணிதம் (கணினிப் பயன்பாடு) இரண்டாமாண்டு.

## விசித்திர மழலை

டென்மார்க்கில் லுபெக் என்ற இடத்தில் பிறந்த மேதை பிராடரிக் ஹெல்ளெகென். இவர் பிறந்த சிலமணி நேரங்களிலேயே பேசத் தொடங்கிவிட்டார். இரண்டு வயதிலேயே கணிதப் பாடங்களை நிபுணரைப் போலச் செய்ய ஆரம்பித்த பிராடரிக் மூன்று வயதில் உலக சரித்திரம், பூகோளம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்க மொழிகள் அனைத்திலும் அபாரமான மேதையாகி விட்டார். டென்மார்க் அரசால் அழைக்கப் பட்டு, சிறப்பிக்கப்பட்ட பிராடரிக் நான்கு வயது அடைந்ததும், நோய் வாய்ப்பட்டு, தான் இறந்து போகும் நாளை முன்னதாகவே சொல்லி, அந்த நாளிலேயே இறைவனுடன் கலந்து விட்டார்.

- **தொகுப்பு: வி. புருஷோத்தமன்,**
இளங்கலை கணினி அறிவியல் துறை
இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு

## இயற்கையைப் போற்றுவோம்

**டி. நாகமஞ்சுளா**
இளங்கலை கணினி அறிவியல் ஆ பிரிவு

**முன்னுரை**:

கடவுள் தந்த ஒப்பற்ற வரப்பிரசாதம் இயற்கை. நம் உயிர்க்கோலத்தில் சுற்றுச் சுழலின் ஒரு பகுதியாக நாம் இருக்கின்றோம். இயற்கையிலிருந்து கிடைக்கின்ற வளங்கள் இன்றி நம்மால் வாழ முடியாது. இயற்கை என்பது நீர், காற்று, மண் மற்றும் காடு முதலியவை சேர்ந்ததாகும். இயற்கையோடு எவ்வாறு இணைந்து உள்ளோம் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**பொருளுரை:**

இயற்கையை மாற்றுவதிலும் அதன் மீது தன் தாக்கத்தை ஏற்படுத்து வதிலும் மனிதனைவிட வேறு எந்த உயிரினமும் திறனைப் பெற்றிருக் கவில்லை. இதன் பொருள் மனிதனுக்கு உலகில் அதிகப் பொறுப்புள்ளது என்பதாகும். மனிதர்கள் அறிவுடைய வர்கள் தாம். ஆனால், இப்போதைய கேள்வி "நாம் போதுமான அளவு அறிவுடையவர்களா?" என்பதே.

**இன்றைய தலைமுறை:**

இக்காலத்தில் நாம் பூமியையும் காற்று, நிலம், நீர், உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றைப் பற்றிச் சிறிதும் அக்கறையின்றி நடந்து கொள்கிறோம். நாம் பூமியை இன்னும் நல்ல முறையில் நடத்த வேண்டும். நம் புவி அன்னையை அன்புடனும் அக்கறையுடனும் நடத்த வேண்டும்.

நாம் இதைச் செய்கின்றோமா? சூழல் மண்டலத்துடன் நாம் நட்புடன் இருக்கின்றோமா? கழிவுப் பொருள்களை உருவாக்காத வாழ்க்கையை நடத்து கின்றோமா? மாசற்ற சுற்றுச் சூழலை அனுபவிக்கிறோமா? இயற்கையோடு நாம் இணைந்து வாழ்கிறோமா? பெரும்பாலும் இல்லை!

இயற்கைக்கு எதிராக நாம் போட்டியிடு கிறோம். இயற்கை மிகச் சிறந்த ஓர் ஆசிரியர் என்று கூறப்படுகிறது. ஆனால், இயற்கையை ஏதேனும் ஒரு காரணத்தால் நாம் அழிக்கிறோம். அதனால் செயற் கையை விரும்புகின்றோம்.

***"அழிந்து போவது செயற்கை***
***நிலைத்து நிற்பது இயற்கை"***

என்பதை மறந்துவிட்டோம்.

## இயற்கை வளங்கள்
## காடுகள்:

***"காடு அழிந்தால்***
***நாடு அழியும்"***

என்பது பழமொழி. ஒரு நாட்டின் வளர்ச்சியிலும், பொருளாதார மேம்பாட்டிலும் காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒரு நாட்டின் செல்வத்தில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் தான் நிர்ணயிக்கின்றன. மழையின் அளவை அதிகரித்து நாட்டின் நீர்வளம் பெருக காடுகளே காரணமாக உள்ளன. மரம், செடி, கொடி மற்றும் பல விலங்கினங் களையும் தன்னகத்தே கொண்டு அவற்றிற்கு வாழ்வளிக்கும் களஞ்சியமாகக் காடு திகழ்கின்றது.

## மரங்களின் பங்கு:

காடுகளின் மிக முக்கிய பங்காகப் பெரிதும், நிறைந்த அளவில் நம் கண்ணுக்குத் தென்படுவன மரங்களே.

***"மரம் வாழ்வின் உரம்"***

மரங்களிலிருந்து விழும் இலைகள் மண்ணில் படிந்து மண்ணிற்கு வளம் சேர்க்கின்றன.

மரங்கள் பிற உயிரினங்கள் சுவாசிப்பதற்கா ஆக்ஸிஜனை ஒளிச் சேர்க்கையின்போது காற்று மண்டலத் துக்குள் செலுத்துகின்றன. காடுகள் புவி வெப்பத்தினை ஒரே சீராக வைக்கவும் உதவுகின்றன. மேலும் ஓசோன் படலம் சிதைவு படாதவாறு காடுகள் பாதுகாக்கின்றன. மேலும்,

***"விண்ணின் மழைத்துளி***
***மண்ணின் உயிர்த்துளி"***



என்பதைப் போல, காடுகள் மழை வளத்தைப் பெருக்க உதவுகின்றன. ஓர் இடத்தில் சராசரி ஆண்டு மழையளவு கூடுதலாக அமைய காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நிலத்தின் மீது படர்ந்துள்ள தாவர வளம் மழைத்துளிகளின் வேகத்தைத் தாங்கி மண் அரிமானத்தைத் தடுப்பதுடன் மழைநீர் மண்ணில் இறங்கவும் துணை புரிகிறது.

***"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்***
***துப்பார்க்குத்***
***துப்பாய தூஉம் மழை"***

என்ற குறளுக்கு ஏற்ப உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்து தருவதோடு தானும் ஓர் உணவாக இருப்பது மழை. எனவே, மரங்களை வளர்ப்பதால் மழையைப் பெறலாம். மழையில்லையெனில் நாடு

முழுவதும் வறுமை என்ற நிலை உருவாகும். அதனையே வள்ளுவர்,

***“விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து***
***உள்ள் நின்றுடற்றும் பசி”***

மழை பொழியாமல் இருந்தால் இந்த உலகம் பசி என்ற நிலையில் உயிர்கள் அனைத்தும் வருந்தும் நிலை ஏற்படும் என்கிறார். ஆதலால்,

***“மரங்களை வளர்ப்போம்***
***மழையைப் பெறுவோம்”***

## நீர் வளம்:

***“நீரின்றி யமையாது உலகுஎனின் யார்யார்க்கும்***
***வான்இன்று அமையாது ஒழுக்கு”***

மனித வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவை நீர் ஆகும். நீர் இல்லாமல் எந்த உயிரினமும் இந்தப் பூமியில் வாழ முடியாது. இயற்கையிலிருந்து கிடைக்கப் பெற்ற வளங்கள் இன்றி நம்மால் உயிர் வாழ முடியாது.

## புவியில் நீர் பரவலின் சதவிகிதம்:

***கடல்- 97.2***
***பனிப்பாறை - 02.0***
***நிலத்தடிநீர் - 00.62***
***தூய நீர் ஏரிகல் - 00.009***
***கடற் கழிமுகப்பகுதி- 00.008***
***வளிமண்டலம் - 00.001***
***ஆறுகள் - 00.0001***

***மொத்தம் - 99.8381 சதவிகிதம்***

நாடுகளுக்கிடையே நீர்வளத்தின் பங்கீடு சமமற்ற நிலையில் காணப்படுகிறது. ஒரு மனிதனுக்கு ஒரு வருடத்திற்கு 1000 கன மீட்டருக்கு (ஒரு நாளைக்கு 725 கேலன்) குறைவாக நீர் கிடைத்தால் அது உணவு உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி, இயற்கை சூழலியலைப் பாதுகாத்தல் ஆகியவற்றைப் பெரிதும் பாதிக்கும். நீர் பற்றாக் குறையானது மோதல் தன்மையை ஏற்படுத்துகிறது. பொது சுகாதார பிரச்சினையை அதிகரிக்கும். சுற்றுச் சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். 1995இல் 31 நாடுகளில் சுமார் 458 மில்லியன் மக்கள் நீர் பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டனர். 2025இல் 48 நாடுகளில் 2.8 மில்லியன் மக்கள் பாதிப்பு அடைவார்கள் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

***“சிறு துளி பெரு வெள்ளம்”***
***“ஒரு பிடி பல படி”***

நீர் ஒரு புதுப்பிக்கக் கூடிய வளமாகக் கருதப்பட்ட போதிலும், இதனை வரம்பு மீறிப் பயன்படுத் துவதால் தட்டுப்பாடு ஏற்படுகிறது. நீர் மேலாண்மை என்பது தற்காலத்தின் மிகவும் முக்கிய மானதாகும்.

***“நீர் இல்லையேல்***
***பார் இல்லை”***

## காற்று வளம்:

இப்புவியானது வளிமண்டலம் என்னும் தடித்த, வாயு உறையால் சூழப்பட்டுள்ளது. இது பொதுவாகக் காற்று என்று அழைக்கப்படுகிறது. உயிர்க்கோளத்தின் மிக முக்கிய கூறாக காற்று விளங்குகிறது. காற்றில்லா சுவாசம் மேற்கொள்ளும் உயிரினங்கள் தவிர வேறு எந்த உயிரும் காற்றின்றி உயிர் வாழ முடியாது.

***“குப்பை உள்ள வீடு***
***நோய்கள் வாழும் கூடு”***

வளிமண்டலம் பூமியின் பாதுகாப்பு உறையாக உள்ளது. அதனால் குப்பைகளை எரிப்பதால் அந்த நச்சுப்புகை வளிமண்டலத்திற்குச் சென்று ஓசோன் படலத்தைப் பாதிக்கிறது. அதன் காரணமாகச்

சூரியனிடமிருந்து வரும் புறஊதாக் கதிர் நேரடியாக நம்மைத் தாக்கும். அதனால் தோல் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். மற்றும் புவி வெப்பமடைய காரணமாகிறது. எனவே, காடுகளை வளர்த்து இவற்றைத் தடுக்கலாம்.

**இயற்கை வளங்களை பாதுகாத்தல்:**

மனிதன் இயற்கை வளங்களை நல்ல முறையில் பேணி, சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் அவைகள் இந்தப் பூமியிலிருந்து முற்றிலும் மறைந்து போகும் நிலை வெகுவிரைவில் ஏற்படலாம்.

இதனால் இன்று நாம் பயன்படுத்தும் இயற்கை வளங்கள் நமது பிற்காலச் சந்ததியினருக்குக் கிடைக்காத அபாய நிலை ஏற்படலாம்.

இயற்கை வளங்களை முற்றிலும் அழிக்கும் உரிமை எந்த மனிதனுக்கும் கிடையாது.

**முடிவுரை:**

ஒவ்வொரு தனிமனிதனுக்கும், இயற்கை பற்றிய விழிப்புணர்வும், அதை காப்பாற்றும் உணர்வும் மிகவும் தேவை.


அமைதியான வாழ்விற்கு ஒவ்வொரு வரும் நமக்குக் கிடைக்கின்ற வளங்களைப் பாதுகாத்திட வேண்டும்.


அதனால் இயற்கை வளங்களைப் பாதுகாத்து இயற்கையோடு இணைந்து இனிமையான வாழ்க்கையை நடத் திடுவோம்.

*எழுத்தாளர் அறிமுகம்*

## ஏர்நெஸ்ட் ஹெமிங்வே






**பிறப்பு: Ernest Hemingway,**
July 21, 1899,
Oak Park, Illinois, united States

இவர் அமெரிக்க நாவலாசிரியர்களுள் சிறந்தவர். இவர் ஓர் உயர்நிலைப்பள்ளியில் படித்துப் பின்னர் ஒரு பத்திரிக்கை அலுவலகத்தில் நிருபராகப் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து உயிர்காக்கும் அவசர சிகிச்சை பிரிவில் (Ambulance) பணியாற்றினார். இவர் 1921 இல் Haddley Richerson என்ற பெண்ணை மணந்தார். இந்தப்பெண் இவரைவிட வயதில் 7 ஆண்டுகள் மூத்த பெண். பின்னர் 1927 இல் இருவருக்கும் விவாகரத்து ஆனது.

இவர் தனது இரண்டாவது திருமணத்தை Panline என்ற

பெண்ணோடு ஏற்றுக்கொண்டார். பிறகு இருவரும் 1940ல் பிரிந்து வாழ்ந்தனர். பிறகு 3-ஆவது திருமணம் Martha Gallhorn என்பவருடன் நடந்தது. அந்தப்பெண் இவருக்குச் சரியான ஜோடியில்லை என்று தெரிந்தது. பின்னர் இவர்கள் இருவரது வாழ்க்கையும் விவாகரத்தில் முடிந்தது. கடைசியாக இவர் Mary Walsh என்ற பெண்ணை மணந்தார். 1961-இல் தற்கொலை செய்து கொண்டார்.

மறைவு: July 2, 1961 (Age - 61) Ketchum, Idaho, United States.

இவரை எழுத்தாளராகக் காட்டிய புகழ் பெற்ற நாவல்: 'The Torents of spring'. மற்றொரு நாவல்: 'The snows of klimanjaro'. இவரது மிகப்பெரிய நாவல்: 'for whom the bell tolls'. இவர் 1952இல் 'The old man and the sea' என்ற நாவலை எழுதினார். அதன் வழியாக உலகப்புகழ் பெற்றார். இவர் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

இவர் பெற்ற குறிப்பிடத்தக்க விருதுகள்: Nobel lprize in Literature (1954), Pulitzer prize for Fiction (1953), Elizabeth Hadley Richardson (1921-1927)

**தொகுப்பு: வி. புருஷோத்தமன்,**
இளங்கலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் ஆ பிரிவு

# இளமையில் வெல்க

**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

✓வில்லியம் மிட் அரசியல் கலந்த அருமையான நாடகம் எழுதி புகழ்பெற்ற போது வயது 14.

✓ஷேக்ஸ்பியரின் 'மாக்பெத்' நாடகத்தை வங்காள மொழியில் எழுதியபோது ரவீந்திரநாத் தாகூருக்கு வயது 14.

✓பிரெஞ்சு இலக்கியத்தில் சிந்தனைகள் பொதிந்த கவிதைகள் எழுதிய விக்டர்ஹியூகோவின் வயது 15.

✓அர்ஜென்டைனாவில் நடைபெற்ற உலக மகளிர் ஹாக்கியில் விளையாடிய ராணி ரம்லத்தோவின் வயது 15.

✓மாவீரன் அலெக்சாண்டர் 16 வயதில் தனது தந்தையின் போர்ப்படையில் தளபதியானார்.

✓கலிலியோ பைசாநகரமான கோபுர விளக்கு பற்றி ஆய்வு செய்தபோது அவருக்கு வயது 17.

✓பீதோவன் இசை உலகில் தன் பெயரை நிலைநாட்டிய போது அவருக்கு வயது 21.

✓பெரும் சீர்திருத்தவாதியாக மாறிய போது மார்ட்டின் லூதர் கிங்குக்கு வயது 22.

✓பரிமாண வளர்ச்சி பற்றிய ஆய்வுக்காகக் கப்பலில் பயணம் மேற்கொண்ட சார்லஸ் டார்வினுக்கு வயது 22.

✓முதன்முதலில் விண்வெளிக்குச் சென்று சாதனை புரிந்த யூரிக்காரினுக்கு வயது 27.

✓ தொலைபேசியைக் கண்டுபிடித்த போது அலெக்சாண்டர் கிரகாம்பெல்லுக்கு வயது 29.

✓ ஷேக்ஸ்பியர் தனது முக்கிய நாடகங்கள் அனைத்தையும் எழுதி முடித்தபோது வயது 30.

***கட்டுரை***

# விருந்தும் வீரமும்

**த. மணிகண்டன்**
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு.

***"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை***
***பருவந்து பாழ்படுதல் இன்று"***

என்ற திருவள்ளுவரின் வாய் மொழிக்கிணங்க தன்னை நாடிவரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்ற வனுடைய வாழ்க்கை ஒரு போதும் துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை. ஆனாலும் சங்ககாலத் தமிழர்கள் விருந்தினரைப் போற்றுவதையே தன் தலையாய கடமையாக எண்ணி வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றாக,



***"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"***

என்று தொல்காப்பிய நூற்பா 234 கூறுகிறது.


விருந்தென்பதன் நேரடியான பொருள் என்னவென்றால் 'புதுமை' ஆகும். எனவே, புதிதாக வருபவரே விருந்தினராவர். அவர் யார்? அறிந்தவர் அல்லாது அறியாதவர் வருபவரே விருந்தினர் ஆவார். 'விருந்து' உபசரிப்பதற்குப் பொருள் வேண்டும். சங்க காலத்தில் பொருள் தமக்குப் போதும் என்றில்லை. ஏனென்றால் விருந்தினரை உபசரிக்க அப்பொருள் வேண்டும். எனவே, தமக்கு வறுமை வந்து விட்டதே! என்று எண்ணிக் கொண்டு இல்லாமல் அவ்வறுமையில் இருந்து மீண்டு விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கை உடையவராக அக்கால மக்கள் இருந்ததனைச் சங்க இலக்கியப் பாடல்கள் விழி அறியமுடிகிறது.

***"அம்குடிச் சீறூர்***
***ஒலிமென்கூந்தல் ஒள்நுதல் அரிவை***
***நடுகல் கைதொழுது பரவும், ஒடியாது***
***விருந்து எதிர் பெறுகதில் யானே, என்னையும்***
***........வேந்தனொடு***
***நாடு தரு விழுப்பகை எய்துக எனவே"***

என்ற புறநானூற்றுப் பாடலில் அக்காலப் பெண் ஒருத்தி வறுமையிலே இருக்கின்றாள். ஆனால், அவளுக்கு விருந்து உபசரிக்க வேண்டும் உணர்வு மேலிடுகிறன்றது. அப்பெண் நடுகல்லைத் தொழுது வேண்டுகின்றாள். ஏ! வீரத்தெய்வமே! எங்கள் வீட்டில் பொருள்வளம் பெருக வேண்டும். அவ்வாறு, பொருள் பெருகினால் விருந்தினர்களை எதிர்கொண்டு எனக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்கிறாள். ஆகவே, தெய்வமே! எனக்கு உதவ வேண்டும என வேண்டுகிறாள்.

போர்வீரனாகிய என் கணவனுக்கும் என் அரசனுக்கும் நல்ல பகைவர்கள்

கிடைக்க வேண்டும். போரில் பகைவர்களை வெல்வதன் மூலம் பொருள் கிடைக்கும். அப்பொருள் மூலம் "நல்ல விருந்து பெறுவேன்" என்பதே புறநானூற்றுப்பாடலின் கருத்தாகும். இதன் மூலம் விருந்தும் வீரமும் இருமனம் கலந்தாற்போன்று சங்க காலத்தில் இருந்தன.



நடுகல்

தனக்கென்று வாழாது தம்மை சார்ந்து வந்தவர்களுக்குப் பொருள் தேடச் செல்லும் தலைமகன் வீரமும், பொருள் வேண்டி தலைமகள் நடுகலை வேண்டுதலும் அப்பாடல் வழி உணர முடிகின்றது.

தான் என்ற சுயநலத்துடன் வாழும் மனிதக் கூட்டம் இன்றைக்கு விருந்து என்பது யாதென்று தெரியாதது. பிறருக்கு உதவும் மனமில்லாத மனித வாழ்க்கையே நடைமுறையாகிவிட்டது. இது மாற வேண்டும். விருந்து முறையாக அமைய வேண்டும்.

☹

***கவிதை***

# பெண்சிசு கொலை

*"குச்சியெடுக்கப் போனவள்*
*குளக்கரையில் அமர்ந்து*
*கும்மியாடும் குழந்தைகளைப் பார்த்து*
*குமுறிய நெஞ்சோடு*
*குடிசைக்குப் போனாள்*
*ஏழாவது வயதில்.*
*கல்லெடுத்துக் காயப்பட்ட*
*கையை தலைக்கு வைத்து*
*துயிலும் பொழுது*
*'அம்மா!' என்னும் அழுகுரல் கேட்டு*
*அலறி எழுந்தாள்.*
*அப்பாவின் அநியாய அடியால்*
*அழும் அம்மாவைப் பார்த்து*
*அழுதாள் பத்தாவது வயதில்.*
*எட்டாத தாவணியை இழுத்துக்கட்டி*
*கோணியிட்டகூட்டுக்குள் குனிந்திருந்தாள்*
*பதிமூன்றாவது வயதில்.*
*அரைபவுனு நகையுடனும்*
*ஆறுகஜ புடவை இரண்டுடனும்*
*மாற்றலானாள் மாமியார் வீட்டிற்கு.*
*பாவம், அவளுக்கென்ன தெரியும்*
*மாமியாரிடம் இருப்பதே*
*ஒரு புடவை தான் என்று.*
*மாமியாரின் ஏச்சிலும்*
*பெருமூச்சு விட்டாள்*
*ஸ்டவ் இல்லாத வீடுதானே என்று*
*ஒரு வருடம் உருண்டு*
*பெற்றாள் பெண் குழந்தையை.*
*கொடுத்தாள் பாலைக் கள்ளியுடன்.*
*நான்பட்ட பெரும்பாட்டை*
*நீயும் பட வேண்டாமம்மா!*
*அழுகுரல் நீங்கும் முன்னே ஆண்டவனிடம்*
*போய் சேரம்மா என்று.*
*பெண்ணே இந்தப்*
*பொருளற்ற காரணங்களைக் கூறி*
*புனித பெண்மையைப் புதைக்காதே.*
*இரவு பகலைப் போல*
*இன்னலும் இனிமையும்*
*மாறி மாறி வரும்."*

**மு. அபிராமி**
விரிவுரையாளர், உயிர்வேதியியல் துறை.

# பெண் சுதந்திரம்

**கா. நித்யா**
இளங்கலைத் தமிழ் முதலாண்டு

**முன்னுரை:**

பெண்ணைப் பற்றியும், பெண் சுதந்திரத்தையும் எங்களின் இன்னல்களைப் பற்றியும் எடுத்துரைக்கச் சுதந்திரம் கொடுத்ததற்கு நன்றி!. சுதந்திரம் கொடுக்கப்பட்டுவிட்டது. பெண்களுக்கு அடுப்படியில் அடைந்திருப்பதற்கும், ஆண் களின் ஆதிக்கத்திற்கும், புகைக்கு அடியில் புகுந்திருப்பதற்கும். இந்த இழி நிலையையே இங்தக் கட்டுரையில் விவரிக்கக உள்ளேன்.

**பண்டைக் காலத்தில் பெண்கள்:**

பண்டைக்காலம் அல்ல, படைப்புக் காலந்தொட்டே ஆண்கள் பெண்களுக்கு எதிராகப் பல இன்னல்கள் இழைத்து வரவே செய்கின்றனர். மகாபாரதத்தில் பாஞ் சாலிக்கும், இராமாயணத்தில் சீதைக்கும் இழைக்கப்பட்ட கொடு மைகளைப் பற்றி இன்றும் நாம் பேசுகிறோம். நாளையும் பேசப்படும். ஏன் இந்த மண் உள்ளளவும் அந்தச் செய்தி மறந்து போகாது.

தெற்கே சீதை அழுதாள்: இலங்கை அழிந்து போனது. வடக்கே பாஞ்சாலி அழுதாள்: கவுரவர் நூறுபேரும் அவரது சேனைகளுடன் அழிந்தனர். பாஞ் சாலிக்கும் கணவர் 5 பேர் இருந்தும் சிறந்த போர் வீரரான பிதாமகன் 'பீஷ்மா' இருந்தும் பாஞ்சாலியின் மானத்தைக் காப்பாற்ற முடியலில்லை.

இன்றும் காலர்கள் இருந்தும் கணவன் இருந்தும் பெண்ணின் கற்புக்குப் பாதுகாப்பு இல்லை. அன்று முதல் இன்று வரை அதே நிலைதான் தொடர்கிறது.

**வரதட்சணை கொடுமை:**

வாழையடி வாழையாய் நன்கு வளர்ந்து வரும் இன்னல்களில் ஒன்றாய் திகழ்வது வரதட்சணை கொடுமையாகும்.

பணியைச் செய்தால் பலனைப் பெறலாம் என்பது நம் அனைவரின் கருத்து. ஆனால், பணியைச் செய்வதற்குப் பணமும் நகையும் முன்கூட்டியே செலுத்தப்படுகிறது. வரதட்சணை என்னும் பெயரில். ஆம் பகுத்தறிவும், பட்டறிவும் இருந்தும் பணப்பறிப்பு இன்றும் இருந்து வருகிறது.

**சமுதாயத்தில் பெண்கள்:**

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும்" என்றார் கவிமணி. ஆனால் இன்று பெண்கள் பொதுவளாகங்களிலும், கல்லூரிகளிலும் எதிர்கொள்ளும் இன்னல்கள் அனைவரும் அறிந்தவையே.

பேருந்துகளில் பயணித்து பெண்கள் அவர்களின் வாழ்க்கைப் பயணத்தைக் கடப்பதென்பது சூழல் நீரில் சிக்கித் தவிக்கும் படகொன்றின் நிலையைப் போன்றல்லவா உள்ளது இவற்றோடு கொலை, தற்கொலை என்று பல இன்னல்களுக்கும் ஆளாகின்றனர்.

**கல்வி:**

அனைவருக்கும் கல்விச் சட்டம் இயற்றப்பட்டு விட்டது. நடைமுறைப் படுத்தப்பட்டு விட்டது. ஆனால் நடை முறை வாழ்க்கையில் பின்பற்றப் படுகின்றனவா என்றால் நிச்சயம் கேள்விக்குறியே பதிலாக அமையும். இந்தச் சமுதாயம் பெண்களை வெள்ளை மனம் என்று கூறி வெற்றுத் தாள் ஆக்கி விட்டது.

**சட்டங்கள்:**

இந்திய அரசு பெண்களின் அவல நிலையை உணர்ந்து அதனைத் தடுப்பதற்காக அதற்கென பல சட்டங்கள் வகுத்துள்ளது. பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294, 354, 362. 366, 366-அ, 375(வன்புணர்ச்சி) 497 (முறை பிறழ்ந்த புணர்ச்சி) என்ற பல பிரிவுகளை ஏற்படுத்திக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கியுள்ளது. வரதட்சணை தடைச்சட்டம் பிரிவு 304-ஆ, 1961இல் கொண்டு வந்தது. உச்சநீதிமன்றம் பிரிவு 4-அ, 39 / 2002 – ஆல் புதிதாக ஒரு சட்டத்தை இணைத்தது. பெண்ணைச் சித்ரவதை செய்வது, மரணம் வரையில் செல்கிறது என்று அது கருதுகிறது. எனினும் இந்தச் சட்டத்தில் ஆயுள் தண்டனையே அதிகபட்ச தண்டனையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. காரணம், மரண தண்டனை என்பது, இந்திய தண்டனைச் சட்டபிரிவு 302-ன் கீழான கொலை வழக்குகளில் மட்டுமே அளிக்கப்படுகிறது என்று அரசு காரணம் காட்டுகிறது. ஒருவர் மற்றொருவரை கத்தியாலோ துப்பாக்கியாலோ தாக்கிக் கொலையை ஏற்படுத்தினால் அவருக்கு எப்படி மரணதண்டனை வழங்கப்படுகிறதோ அதேபோல், “ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டால், அதற்கு ஆதாரம் நிரூபிக்கப்பட்டால் கண்டிப்பாக அந்த மரணத்திற்குக் காரணமானவர்க்கு மரண தண்டனையே அளிக்கப்படவேண்டும்” அப்பொழுதுதான் இந்தச் சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறையும்.

**முடிவுரை:**

பெண்கள் பலவீனமானவர்கள் அதனாலேயே ஆண்டாண்டு காலமாக கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். இதில் எங்கிருந்து பெண்கள் சுதந்திரத்தைப் பெறுவது? “அடைந்து விட்டோம் சுதந்திரம் அன்னியரின் பிடியிலிருந்து, ஆணாதிக்கத்தில் இருந்து அல்ல.”

***மருத்துவம்***

# ஆவாரம் பூவே...

மனிதர்களுக்கு நோய் நீக்கும் மலர் வகைகளில் ஆவாரம் பூ சிறப்பானது.

உடற்தோலில் ஏற்படும் வறட்சி, வியர்வையால் உப்புப் படிதல், நா வறட்சி போன்றவற்றை நீக்க ஆவாரம் பூ உதவுகிறது.

உடல் நமைச்சல் நீங்க ஆவாரம் பூவுடன் பச்சைப் பயறினைச் சேர்த்து அறைத்து உடல் நமைச்சல் உள்ள இடத்தில் தேய்த்து வந்தால் நமைச்சல் நீங்கும்.

ஆவாரம் பூவினை வதக்கித் தூங்குவதற்கு முன் கண்களில் வைத்துக் கட்டிக்கொண்டால் கண்நோய் நீங்கும்.

ஆவாரம் பூவினைக் கஷாயம் செய்து பாலில் கலந்து பருகினால் உடற்சூடு தணியும்.

- **திருமதி. லோ. புனிதவள்ளி,**
தமிழ் விரிவுரையாளர்

# புகழ்பெற்ற பாடல் அடிகள்

- o'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' – மகாகவி பாரதியார்
- o'தமிழனென்று சொல்லடா. தலை நிமிர்ந்து நில்லடா' – நாமக்கல் கவிஞர்
- o'கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள். கவலை உனக்கிலை ஒத்துக்கொள்' - நாமக்கல் கவிஞர்
- o'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' – கவிமணி.
- o'செய்யும் தொழிலே தெய்வம்' – பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.
- o'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'-வள்ளலார்
- o'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல், வேறொன்று அறியேன் பராபரமே'- தாயுமானவர்.
- o'உள்ளம் பெருங்கோயில் ; ஊனுடம்பு ஆலயம்'- திருமூலர்.
- o'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'- அப்பர்
- o'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' - மனோன்மணியம் பெ. சுந்தரனார்
- o தமிழுக்கும் அமுதென்றுபேர் அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் - பாவேந்தர் பாரதிதாசன்.

*தொகுப்பு:* **சு. திருநாவுக்கரசு**
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

# சிறுமிகள் பாதுகாப்பு

**எம். வெண்ணிலா**
**இளங்கலை ஆங்கில இலக்கியம் முதலாண்டு**
**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் மகளிர் கல்லூரி**

கல்வியிலும், கணினி துறையிலும் கட்டுப்பாடின்றி சாதனை புரியும் இக்காலத்திலும் பெண்களுக்குக் கள்ளிப்பாலில் கருவறைக் கல்லறைகள் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன.

பெண் குழந்தைகள் அழிக்கப்படும் விதங்களையும், அவர்களை அழிவி லிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளும் பற்றியும் இவண் காண்போம்!.

### சரித்திர மங்கையரை அழிக்கும் சர்வாதிகாரம்:

"மண்ணுக்குள் மூடர், மாதர் அறிவினைக் கெடுத்தார்"
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் பெற்றால் கைகொட்டிச் சிரியாரோ?"
என்ற பாரதியின் சாடல் சமூகத்தில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வில்லையோ?

அறிவியல் முன்னேற்றத்தினால், பெண் சிசுக் கொலைகளும் புதிய அவதாரமெடுத்துள்ளன.

"கள்ளிப்பால் கொலைகள் - இன்று
கருக்கொலைகளாக
களமிறங்கியிருக்கின்றன
பெண் சிசுக்களின் நெஞ்சை நிறைத்த
நெல்மணிகள் இக்கணினியுகத்தில்
அதிவேக மின்விசிறிகளாய்
மூச்சடைக்கச் செய்கின்றன.

கடந்த ஆண்டு கணக்கெடுப்பின் படி பெண்சிசுக் கொலைகள் பல ஆயிரத்தை எட்டி உள்ளது.

தாயாய், தாரமாய் ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் மறைந்து நின்ற பெண்கள், முதல்வராய், பிரதமராய், IAS, IPS அதிகாராகளாய், அறிவியல் அறிஞர்களாய், உலகின் அன்னையாய் தன் சாதனைக் கரங்களை நீட்டும் இக்காலத்திலும் இத்தகைய கண்மூடித்தனங்கள் நிறைவேறிக் கொண் டிருக்கின்றன என்பது ஒவ்வொரு மகளிருக்கும் மாளாத துயரினைத் தருகின்றனர்.

## மகளிரின் மகத்துவங்கள்:

அறிவியல் மூலம் சாதனை படைத்தார் கல்பனா சாவ்லா. அரசியலால் சாதனைப் படைத்தார் அன்னை இந்திரா. தூய அன்பினால் சாதனை படைத்தார் அன்னை தெரசா. ஆற்றலினால் சாதனை படைத்தார் பி.டி. உஷா, மல்லேஸ்வரி, சானியா மிர்சா, தன்னம்பிக்கையாலும், தைரியத்தாலும் சாதனை படைத்தார் கிரண்பேடி. இவ்வாறு பெண்கள் ஒவ்வொரு தனித்தனி உணர்விலும், துறைகளிலும் சாதனை படைத்துள்ளனர்.

இவர்களின் சரித்திரங்களைப் படிக்கும் எத்தனை சகோதரிகள் நாளை சரித்திரங்களைப் படைக்க விழையலாம்? அவர்களின் கருத்துகளைக் கருவோடு அழித்து அவர்களின் சாதனைகளை, சரித்திரங்களை அவர்களோடு சாகடிக் கலாமா?

“ எந்த மூங்கிலுக்குத் தெரியும்
அது புல்லாங்குழல் ஆகலாம் என்று?
எந்த மலருக்குத் தெரியும்
அது கடவுள் மாலையில் சேரலாம் என்று?”

சாதனை படைத்தவர் களெல்லாம் சாதனை மங்கையராகவே பிறக்க வில்லை. சாதனை புரிய அவர்களுக்கு வாய்ப் பளிக்கப்பட்டிருக்கிறது. வாழ்வளிக்கப்பட்டிருக்கிறது.

அத்தகைய வாய்ப்பும் வாழ்வும் வழங்கப்பட்டால் ஒவ்வொரு வரும் சாதனை மங்கையர் தான்.

## பெண் குழந்தையைப் பாதுகாக்க அரசின் வழிமுறைகள்:

அதிகரித்து வரும் கருக் கொலைகளைத் தவிர்க்க இன்று SCAN மூலம் குழந்தையின் நலம் பற்றி மட்டுமே அறிவிக்கப்பட்டு உள்ளது. மேலும், பெண்குழந்தைகளை வளர்க்க விருப்பமில்லாதவர்கள், ‘தொட்டில் குழந்தை’ திட்டத்தைப் பயன்படுத்திப் பெண்குழந்தைகளின் உயிரைக் காக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும், பெண் குழந்தைகள் பிறந்தால் அவர்களுக்கு உதவித்தொகை, வயது வந்த பெண்களுக்குத் ‘திருமண உதவித் திட்டம், அரசினர் மகளிர் விடுதிகள், மகளிர் காவல் நிலையங்கள் கைம் பெண்களுக்கு உதவித்தொகை என மகளிருக்காகப் பல உதவித் திட்டங்கள் நமது தமிழக, இந்திய அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் கல்வித் துறையிலும் பலவிதமான உதவித் தொகைகள், இலவச மிதிவண்டிகள், புத்தகங்கள், இலவச ஆடைகள், உணவு எனப்

பலவகையிலும் ஆண், பெண் வேறுபாடின்றி வழங்குவதால் பெண்கள் சமத்துவம் மிளிர சாதனை படைக்க வழிவகை அமைகிறது.

இவ்வாறு, பெண்களைப் பாதுகாக்க பல வழிகள் உள்ளன. அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை இளைஞர்கள் மூலம் மக்களிடம் ஏற்படுத்தி மகளிரைப் பாதுகாப்போம்!

**முடிவுரை:**

*"கும்மியடிப் பெண்ணே கும்மியடி*
*தமிழ்நாடு குலுங்கிட கும்மியடி*
*நம்மைப் பிடித்த பிசாசுகள்*
*போயின – நன்மை கண்டோமென்று*
*கும்மியடி"*

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார். நாம் சாதம் வடிக்கவும், வேதம் படைக்கவும், விவேகமுடையவர் என்பதை மானுடர் உணர வாகை சூடுவோம்.

# இணையம் பிறந்த கதை

**மா. பிரேம் குமார்**
தமிழ் இலக்கியம் மூன்றாமாண்டு

1969-ஆம் ஆண்டில் இணையம் (இன்டர் நெட்) முதன்முதலாக சிறு அளவில் காலடி எடுத்து வைத்தது. 'ஆர்பாநெட்' என்ற பெயரில் 'அமெரிக்க பாதுகாப்பு முன்னோடி ஆராய்ச்சித் திட்ட முகமை (ஆர்பா) இந்த வலை இணைப்பை உருவாக்கியது.

பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மையங்களை இந்த வலையமைப்பு இணைத்தது. ஆனால் சில லட்சம் பேரே இந்த வசதியைப் பயன்படுத்தும் நிலை இருந்தது.

அடுத்து 1990இல் அந்தத் தொழில் நுட்பத்தில் ஒரு பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. டிம்பெர்னர்ஸ்லீ என்ற ஆங்கில மென் பொருள் நிபுணர் 'என்கொயர்' என்ற 'புரோகிராமை' எழுதினார். அவர்தான் குழந்தைப் பருவத்தில் பயன்படுத்திய விக்டோரியா காலபொது அறிவுக் களஞ்சியமான 'என்கொயர்' வித்தின் அப்பான் எவ்ரிதிங் கின் அடிப்படையில் அவர் அந்தப் பெயரைச் சூட்டினார். அப்போது டிம் பெர்னர்ஸ். சுவிட்சர்லாந்தில் உள்ள செர்ன் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் தனது பணிகளை மற்றவர்கள் எளிதாக ஆன்லைன் வழியாக பெறும் வகையில் ஒருங்கிணைக்க நினைத்தார்.

எனவே, அவர் ஒரு 'லாங்வேஜ் கோடு அமைப்பை உருவாக்கினார். 'ஹைபர் டெக்ஸ்ட் மார்க் அப் லாங்வேஜ் என்ற அதன் சுருக்கம் எச்டிஎம்எல் என்பதாகும். ஒவ்வொரு இணையப் பக்கத்துக்கும் உரிய தனித்து இடமான 'யூஆர்எல்' (யூனிவர்சல் ரிசோர்ஸ் லொகேட்டர்) மற்றும் ஒரு தொகுப்பு விதிகள் அல்லது 'புரோட்டா கால்கள் (எச்டிடிபி அல்லது ஹைபர் டெக்ஸ்ட் டிரான்ஸ்பர் புரோட்டோ கால்ஸ்) குறிப்பிட்ட பக்கங்களை இணையத்தில் ஒன்றாக இணைக்க உதவுகிறது.



உலகின் முதலாவது இணையதளத்தை 1991–ஆம் ஆண்டு உருவாக்கிய பெருமையும் பேர்னர்ஸ் லீயையே சேரும்.

ஆனால் பேர்னர்ஸ் லீ தனது கண்டுபிடிப்புகளால் பணம் ஏதும் ஈட்டவில்லை. மாறாக 'நெட்ஸ்கேப்' பை இணைத்து உருவாக்கிய மார்க ஆண்டர்சன் போன்றோர் இணையதளத்தால் முதன்முறையாகப் பெரும் பணக்காரர் களானவர்களில் ஒருவராயினர்.

# கவிமடல்

அன்புள்ள மலரே!
உன் மீது இருக்கும் துளிகள்
பனித்துளி என்று நினைக்காதே!
நீ வாடாமல் இருக்க நான்
சிந்திய கண்ணீர் துளிகள்
இப்படிக்கு மேகம்...


**ச. ஏகராணி**
இளங்கலை கணினி பயன்பாட்டியல் முதலாண்டு
ஆ பிரிவு

# பாலிகிராப்

செடி, கொடிகளுக்குக் கூட உயிர் உள்ளது என்பதை பல வருடங்களுக்கு முன்னரே டாக்டர் ஜெகதீஸ் சந்திரபோஸ் என்ற இந்திய விஞ்ஞானி தனது ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்தார். ஆனால், செடி, கொடிகளுக்குத் தம் சுற்றுப்புறத்தில் நிகழும் நிகழ்வுகளை அறிந்து கொள்ளும் திறனும், உணர்வுகளும், நினைவாற்றலும் உண்டு என்பது புதிய செய்தி.


ஒருவர் உண்மை கூறுகிறாரா அல்லது பொய் பேசுகிறாரா என்பதைக் கண்டறிய உபயோகப்படுத்தப்படும் கருவியே பாலிகிராப். இதை லை டிடெக்டர் (Lie Detector) என்றும் சொல்கிறார்கள்.

செடிகளுக்கு உணர்வுகளும், பிரித்தறியும் திறனும் உண்டு என்பதை இந்த பாலிகிராப் கருவிகொண்டு நடத்தப்பட்ட சோதனைகளின் மூலமே நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனைகளை முதன் முதலாக நடத்தியவர் அமெரிக்காவைச் சேர்ந்த கிளீவ் பேக்ஸ்டர் என்ற பாலிகிராப் நிபுணரேயாவார்.



பாலிகிராப் கருவியில் பல எலெக்ட்ரோடுகளும், ஒரு கிராப்

வரையும் கருவியும் இருக்கும். போலீஸ் விசாரணையின் போது சந்தேகப்படும் நபரின் உடலில் பல பாகங்களில் இந்த எலெகட்ரோடுகளைப் பொருத்தியபின் அவரிடம் கேள்விகள் கேட்கப்படும். அவர் பதில் சொல்லும் போது அவரது உடலில் ஏற்படும் பல நுண்ணிய மாற்றங்களை பாலிகிராப் கருவி துல்லியமான கோடுகளாக கிராப் வடிவில் பதிவு செய்யும். இந்தப் பதிவுகள் உண்மை பேசும்போது ஒரு விதமாகவும், பொய் பேசும்போது வேறு விதமாகவும் இருக்கும். இந்த வித்தியாசங்களை ஆராய்ந்து, அந்த நபர் கூறியது உண்மையா, பொய்யா என்பதைக் கண்டுபிடித்துவிட முடியும்.




பாலிகிராப் எலெக்ட்ரோடுகளைச் செடியின் இலைகளோடு இணைத்து இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டது. அந்த அறையில் பாலிகிராப் இணைக்கப்படாத வேறொரு செடியும் வைக்கப்பட்டது. கிளீவ் பேக்ஸ்டரின் மாணவர்கள் ஆறுபேர் இந்தப் பரிசோதனையில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே அந்த அறையினுள் அனுப்பப்பட்டனர்.

முதல் 5 நபர்களும் உள்ளே சென்று விட்டு வெளியே வரும்போது பாலிகிராப் பதிவுகளில் விசேஷமான மாற்றம் ஏதும் இல்லை. ஆறாவது நபர் உள்ளே நுழைந்து பாலிகிராப் இணைக்கப்படாமல் இருந்த மற்றோர் செடியை வெட்டி எறிந்தாராம். உடனே பாலிகிராப் இணைக்கப்பட்ட செடியில் எற்பட்ட அதிர்வுகளால் பாலிகிராப் பதிவுகளில் மிக அதிகமான மாற்றம் ஏற்பட்டது.

ஒருமனிதன் மிகக் கடுமையான உடல் வலியில் அல்லது மனக்கவலையில் இருக்கும்போது பாலிகிராப் பதிவுகளில் என்ன மாற்றம் இருக்குமோ, அதே போன்ற மாற்றம் பக்கத்தில் இருந்த செடியை வெட்டிய போது இந்தச் செடிகளில் ஏற்பட்டது.

சில மணி நேரங்களுக்குப்பின் பரிசோதனையில் ஈடுபட்ட ஆறு மாணவர்களும் தனித்தனியே அந்த அறையினுள் அனுப்பப்பட்டனர்.

மற்ற ஐந்து மாணவர்களும் உள்ளே சென்ற போது பாலிகிராப் பதிவுகளில் எந்த மாற்றமும் நிகழவில்லை. ஆனால் செடியை வெட்டியெறிந்த ‘கொலைகார’ மாணவன் உள்ளே நுழைந்த உடனேயே பாலிகிராப் கருவியின் முள் தாறுமாறாக இயங்கியது.

இந்தச் செடி இன்னொரு செடி வெட்டப்பட்டதை உணர்ந்ததோடு மட்டுமின்றி, வெட்டியவனையும் நினைவில் வைத்திருந்தது. சுமார் ஒரு மாத காலம் வரையில் அந்தக் குறிப்பிட்ட மாணவர் அறையில் நுழைந்த போதெல்லாம் பாலி கிராப் பதிவுகளில் மாற்றங்கள் நிகழ்ந்தன.

**தொகுப்பு: எஸ்.சரத்குமார்**
இளங்கலை நுண்ணியிரியல் முதலாண்டு

# மாமனிதர் மாசேதுங்

சே. கற்பகராஜ்
இளங்கலை வணிகவியல் கணினி பயன்பாடு
இரண்டாமாண்டு ஆ பிரிவு

**பசுமையான சீனா:**

இயற்கை அழகு நிறைந்த கிராமம், வற்றாத நீர், வளம் கொழிக்கும் வயல்கள், அந்தப் புனித பூமியான சீனாவில்தான் 19-11-1982இல் மாசேதுங் பிறந்தார். அவர் இளம் வயதிலே இரக்க குணம் உடையவராக காணப்பட்டார். தன் தந்தையால் 'நல்ல உழைப்பாளி' என்று பாராட்டு பெற்றார்.



**பள்ளி வாழ்க்கை:**

ஆசிரியர்களின் கடுமையான தண்டனையால் பள்ளி வாழ்க்கையை வெறுத்தார். ஷாவோஹாங்கை நகரை விட்டு ஏறக்குறைய எட்டு மைல் தொலைவிலுள்ள "டுங்டைஷான்" அடைந்து டுங்ஷான் உயர்தர ஆரம்பப்பள்ளியில் தன்னடைய பதினாறாவது வயதில் சேர்ந்தார். சில காலங்களிலே தான் தன் தாய்நாட்டைக் காக்க வேண்டும் என்ற இலட்சியத்தை மனத்தில் பதித்தார். அப்பள்ளியில் தினமும் காலையில் மாணவர்களுக்கு நாட்டு நடப்பு, நாட்டின் அரசியலையும் எடுத்துரைப்பர். சீனாவின் சீர்குலைவை அறிந்து மாணவர்கள் கிளர்ச்சி மனப்பான்மை கொண்டவர் களானார்கள்.

மாசேதுங் 1911-ஆம் ஆண்டில் "ஜனபலம்" என்ற பத்திரிகையைப் படித்தார். அதில் வஞ்சகங்களை எதிர்த்து காண்ட்டனில் நடந்த ஆயுதம் தாங்கி கலத்தில் உயிர்நீத்த 72 தியாகிகள் பற்றி அறிந்து மனம் உருகினார். மாசேதுங் தானம் நாட்டுக்காகப் பாடுபட வேண்டும் அதற்குத் தான் சிப்பாய் ஆகவேண்டும் என்று நினைத்து ராணுவத்தில் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 18.

மனத்தில் தேசப்பற்று கொண்ட இளைஞர்கள் மாவோவுடன் நாட்டுக்காகப் போராட மிகுந்த ஆர்வம் கொண்டனர். மாசேதுங் அரசியல் ஆர்வம் கொண்டார். அவருடைய எண்ணம் வன்முறையில் சென்றது. மாசேதுங் வியாங்ரெவியூ என்ற ஏட்டின் ஆசிரியராகப் பணி புரிந்தார். இதுவே சீனா இளைஞர் களுக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

சீன வரலாறு போற்றதற்குரிய வரலாறு. அதன் சிறப்பு படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அபினியுத்தம் நடைபெற்றது. சீனாவிடம் பலவந்தமாக பல பகுதிகள் பிடுங்கப்பட்டு ஆக்கிரமிக் கப்பட்டன. 1894இல் சீனா துண்டாடப்பட்டது. சீனா வெற்றிக்குச் சீனா சிவப்பு படை முக்கியமானதாகத் திகழ்ந்தது.

மாசேதுங் 1922-ஆம் ஆண்டு ஹினானில் பொதுவுடைமை கட்சி செயலாலராகப் பொறுப்பு வகித்தார். சீனா பொதுவுடைமை கட்சி உலகில்

வலிமை நிறைந்த கட்சியாகத் திகழ்ந்தது.

"*நாம் பழமையான உலகத்தை விட்டுப் புதியதோர் உலகத்திற்குச் செல்ல இருக்கிறோம். ஆம் நிர்மாணிக்க இருக்கிறோம். இதொன்றும் நமக்குச் சிரமமானதல்ல. நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்று உறுதியான நம்பிக்கை கொண்டு திகழ்வோம். அப்போதுதான் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியும்*" என்றார்.

1954-ஆம் ஆண்டு சீனாவின் குடியரசு தலைவர் பதவியில் ஐந்தாண்டுகள் இருந்தார். தன் சொந்த ஊருக்கு ஷாவோஷானுக்கு முப்பத்திரண்டு ஆண்டு களுக்குப் பின்னர் வந்தார். இருபதாம் நூற்றாண்டின் மாமனிதர் மாசேதுங் எனலாம்.

# நட்பு

"செடியில் மலரும்
பூவின் வாசத்தை விட
கல்லூரியில் மலரும்
நட்பின் பாசம் அதிகம்
உண்மையான நட்பு
தாயின் கருவறைப் போல்
யாரும் பார்த்ததில்லை.
உன் நட்பில் உறங்க ஆசைதான்
விடியும் வரை அல்ல,
உயிர் பிரியும் வரை.
நாம் இருவரும் வெவ்வேறு
கருவறையில் பிறந்தாலும்
நமக்கு நட்பு என்னும்
தாய் ஒன்று தான்!"

**டி. காயத்ரி**
இளங்கலை ஆடை வடிவமைப்பு மற்றும் துகிலியல் துறை முதலாண்டு

# மக்கள் தலைவர் கே.எஸ்.ஆர்.

(கடந்த இதழின் தொடர்ச்சி)

## பண்பாட்டுச் சேவை

தமிழர்களின் பழங்கால விளை யாட்டுகளுள் முதன்மையாகத் திகழ்வது கபடியாகும். அந்தக் கபடி விளையாட்டிற்குப் புதுப்பொலிவையும், ஏற்றத்தையும் தந்து போற்றி வளர்த்த பெருமைக்குரியவர் கே.எஸ்.ஆர். ஆவார். தமிழகத்தின் ஊர்கள் தோறும், ஊராட்சி ஒன்றியம் தோறும் மாவட்டந்தோறும், மாநிலந்தோறும் கபடிப் போட்டிகளை நடத்தி வருகிறார். சிறந்த அணிகளுக்குப் பரிசுகளும் பாராட்டு களும் வழங்கிச் சிறப்பித்து வருகிறார். இதன் மூலம் சிறந்த கபடி விளையாட்டு வீரர்கள் உருவாவதற்கு அடித்தளமாகத் திகழ்கிறார். கபடியில் இன்று இந்தியா பல்வேறு தங்கக் கோப்பைகளைத் தட்டி வருவதற்கு ஐயா அவர்களின் அயராத முயற்சியே காரணம். தமிழர்களின் கண்ணான கபடியைப் புகழ்மணக்கச் செய்த பொன்னான தலைவர் கே.எஸ்ஆர். என்றால் அது மிகையாகாது. எனவே, தமிழகம் இவரை 'கபடித்தந்தை' எனப் போற்றி வருகிறது.

## பால்பண்ணைத் தொழில் முன்னோடி

மாதா மறந்தாலும் தான் மறவாது மக்களைக் காக்கும் மாபெரும் தாய் கோமாதா (பசு) என்பார்கள். அத்தகைய சிறப்பு பொருந்திய பசுவினைப் போற்றி வளர்ப்பதிலும், பால் உற்பத்தி செய்வதிலும் முன்னோடியாக

கே.எஸ்.ஆர். திகழ்கிறார். புதிய தொழில்நுட்பங்களைத் தனது பால் பண்ணையில் புகுத்தி, பால் உற்பத்தியில் புரட்சியைச் செய்த பெருமை கே.எஸ்.ஆர் அவர்களையே சாரும். திருச்செங்கோடு வட்டம் பால் உற்பத்தியில் முன்னோடியாகத் திகழ்வதற்கு கே.எஸ்.ஆர் அவர்களே காரணம்.

## முன்னோடி விவசாயி

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" எனப் பெரியோர்கள் கூறுவர். அத்தகைய உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் தொழிலாகிய விவசாயத்தைப் போற்றிச் செய்யும் முன்னோடி விவசாயியாக கே.எஸ்.ஆர் விளங்குகிறார். விவசாய விஞ்ஞானிகளின் பரிந்துரைகளை ஏற்று தரமான வித்துக்களைக் கொண்டும், மருந்துகளைக் கொண்டும் சிறந்த பயனைப் பலரும் அறிய படைத்து வருகிறார். இயற்கை உரங்கள், இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பூச்சி மருந்துகள் ஆகியவற்றைக் கொண்டும், பழங்கால விவசாய முறையைப் புதுமையான முறையில் செய்து வருகிறார். பல்லாயிரக்கணக்கில் பல விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்து வேளாண்மைத்துறையில் தன்னி றைவு பெற்று உழைத்து வருகிறார்.

## இரத்த தானத்தின் முன்னோடி

மனித உடலின் ஆதாரமாகத் திகழ்வது இரத்தம் ஆகும். விபத்து மற்றும் பிரசவ நேரங்களில் உயிர்காக்கும் உயரிய பொருள் இரத்தமே ஆகும். அன்ன தானத்தைவிட ஓர் உயரிய தானம் இரத்ததானம் ஆகும். இதைத் தன் பட்டறிவால் உணர்ந்த பண்பாட்டு நாயகர் கே.எஸ்.ஆர் ஆவார். தான் மட்டும் இரத்ததானம் செய்வதோடு நிறுத்தாமல் தன்னைச் சார்ந்துள்ள தொழிலாளர் தோழர்களையும், கல்வியாளர்களையும், மாணவ, மாணவியர்களையும், தன் நயமான பேச்சாலும், பாராட்டுக்களாலும், இரத்ததானம் செய்ய ஊக்குவித்து வருகின்றார். இதனால் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான ஏழை, எளிய தாய்மார்கள், எளிய பிரிவைச் சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள், விபத்துக்குள்ளாகி உயிருக்குப் போராடும் வாகனவாசிகள் பயன் பெற்று வருகிறார்கள். தமிழகத்திலேயே அதிக இரத்ததானம் செய்யும் ஒரே நிறுவனம் மனித நேயர் கே.எஸ்.ஆர் அவர்களின் கல்வி நிறுவனங்கள் என்றால் அது மிகையாகாது. ***(தொடரும்)***

**கவிஞர் திரு. மோ. ஆ. யுவராசா**
**தமிழ்ப் பேராசிரியர்**
**கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி**

# வெற்றி

'வெற்றி' நாம் பெறுவது.
'தோல்வி' நாம் கற்பது.
முதலில் கற்றுக் கொண்டாலும்
பின்னர் வெற்றி கொள்வோம்.

**கா. நித்யா**
இளங்கலைத் தமிழ் முதலாண்டு



| தொடர் செய்யுள் : பகுதி - 04 |
|---|

## ❄ கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ் ❄



### 4. சப்பாணிப் பருவம்

**பிள்ளைத்தமிழின் நான்காம் பருவம் சப்பாணிப்பருவம் ஆகும். பாணி என்பதற்கு "கை" என்று பொருள். (கே.எஸ்.ஆர். ஆகிய) குழந்தை தன் இரண்டு கை களையும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் தட்டும் பருவமே இப்பருவம் ஆகும். குழந்தையின் 9-ஆந் திங்களில் இது நிகழும்.**

முகத்திலே புன்னகை பொன்னகை ஒத்திடும் ;
முழுநிலா நிறத்தில் ஆடை ;
முக்கனிச் சுவைபோல முதிர்சுவை தந்திடும்
முறையான இனிய பேச்சு;
அகத்திலே இறைவனை அனுதினம் தொழும்பாங்கு;
அருந்தமிழைப் போற்றும் நேயம் ;
அருந்துணை ராஜம்மை அனுதினம் ஊட்டிடும்
அமுதருந்தும் இன்ப வாழ்க்கை;

இகத்திலே இவற்றினை இனிதாகப் பெற்றவா!
இசையோடு வாழும் செல்வா!
ஈதல்மேல் காதலை ஈடின்றி கொண்டவா!
ஈசனைத் துதிக்கும் மைந்தா!

சகத்துள்ளோர் போற்றிடும்
மகத்துவக்கைகளால் சப்பாணி கொட்டியருளே!
சரித்திரம் படைத்திடும்
செங்கோட்டுரங்கனே! சப்பாணி கொட்டியருளே!
தோகைமேல் ஏறிடும் தோன்றலை
முருகனைத் துதித்துவாழ் நற்கொற்றவா!
தூயனே! கல்விவள்ள் நேயனே!
செங்கோட்டுத் தொன்னகரில் வாழ்நற்றவா!
வாகைமேல் வாகையை வாழ்க்கையில் பெற்றவா!
வனிதைரா ஜம்மையின் புனிதகை பற்றியே
வள்தருமம் பலசெய்பவா!

பா - கையில் ஏந்திவரும் பாவலரை
நாவலரைப் பாசமுடன் எதிரழைத்தே
பண்புடனும் அன்புடனும் பரிசுகள் தருபவா!
பைந்தமிழின் சுவையுண்டா!

நீ கையில் செய்திடும் ஈகைக்கு இணையில்லை
நிகரில்சப் பாணிகொட்டே!
நிறைகுணத் தரங்கனே! நிறைகுடச் செல்வனே!
நினைந்துசப் பாணிகொட்டே!

கவிஞர் *திரு. மோ. ஆ. யுவராசா,*
தமிழ்ப்பேராசிரியர்,
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி.

## கல்வி

"அறத்தை மறந்து
அடிக்கத் தொடங்கினோம்.
வீரத்தை விரும்பி
வெட்டத் துணிந்தோம்.
விளைவுகள் விபரீதமாயின.
படித்த பின்னரே
வாழ்க்கை புரிந்தது."

**சி. அருள் கண்ணன்**
இளங்கலைத் தமிழ் முதலாண்டு

## முயற்சி

"மனத்தை இரும்பாக்கு.
மலையைத் துரும்பாக்கு.
உன்னால் முடியும் - துன்பங்கள்
தன்னால் மடியும்"

**வே. ஆனந்தி**
இளங்கலைத் தமிழ் முதலாண்டு

**முனைவர் க. முருகேசன்**
இணைப்பேராசிரியர்,
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்.

## வா ழ் த் து க ள்

தி.மு.க இலக்கிய அணி சார்பில் மாவட்ட அளவில் நடைபெற்ற பாரதிதாசனார் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் இளங்கலை தமிழ் இலக்கியம் மூன்றாமாண்டு பயிலும் மாணவி எம்.சரண்யா மாவட்ட அளவில் இரண்டாமிடம் பெற்று பரிசுத் தொகை ரூபாய் மூவாயிரத்தைப் பெற்றுள்ளார். அவருக்கு விடியலின் வாழ்த்துகள்.

## க ரு த் து ம ட ல்

“ஆகஸ்ட் மாத விடியல் இதழ் கிடைத்தது. ஒவ்வொரு பக்கமும் செய்திக் களஞ்சியமாகத் தென்படுகிறது. மாணவர் களின் சிந்தனைகள் சொற்களாக வடிவெடுத்துச் சுவையூட்டுவதை இனிமை யாகச் சுவைத்து மகிழ்ந்தேன்.

நீர் மாசுபாடு குறித்த ‘த. தீபா’ அவர்களின் கட்டுரை கவனிக்கத் தக்கதாகவும், இன்றைய கால கட்டத்திற்கும் தேவையானதாகவும் இருக் கின்றது. பல்வேறு துணுக்குச் செய்திகள் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் துலங்குகின்றன.

கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழின் ‘செங்கீரைப் பருவம்’ பாடலை எழுதிய மோ.ஆ.யுவராசா அவர்களுக்குக் ‘கவிஞர்’ என்னும் பட்டத்தைக் கவினுற வழங்கலாம் என அவருடைய எழுத்து பறைசாற்றுகிறது.

அட்டைப்படம் தொடங்கி அனைத்தும் ஆழ்கடலில் தேடி எடுத்த நல்முத்துக் களாகப் பிரகாசிக்கின்றன.

எதிர்காலத் தமிழ் உலகம் ஒளிபெற்றிட ஒளிருவாள் ஏந்தும் உன்னதமான பணியை உவகையுடன் செய்யும் உங்களை மனதார வாழ்த்துகிறேன்.”

## நி க ழ் வு

ஆசிரியர் தினவிழாவை முன்னிட்டு தமிழ்த்துறையின் சார்பாக 4-9-10 சனிக்கிழமையன்று விழா கொண்டாடப் பட்டது.

அவ்விழா நிகழ்ச்சியின் தொடக்க மாகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மா. கார்த்திகேயன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் ‘ஆசிரியர்களின் சொற்கள் காலம் கடந்தும் நிலைநிற்பவை: மாணவர்களின் ஒளிமயமான வாழ்வுக்குத் தூண்டு கோலாக நிற்பவர்கள் ஆசிரியர்கள்’ எனும் கருத்தில் தலைமையுரை நிகழ்த்தினார்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களை நினைவு கூரும் வகையில் அவரைப் பற்றிய ஒளி,ஒலி பரப்பைத் தமிழ்த்துறை விரிவுரையாளாகள் முனைவர் இரா. குணசீலன், திரு.நா. பரமசிவம் ஆகியோர் வழங்கினார்கள். பின்னர் ஆறு மாணாக்கர்கள் கவிதை வழங்கினர். விழாவின் நிறைவாகத் தமிழ் விரிவுரையாளர் திரு.வீரா.முருகானந்தம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## *இந்த இதழின் ஓவியங்கள்*

**முன்பக்க அட்டை:**

**ஏ. சுமித்ரா**

இளங்கலை கணிதம் (கணினிப் பயன்பாடு)
மூன்றாமாண்டு

**பின்பக்க அட்டை:**

**வீ. ஷர்மிளா**

இளங்கலை இயற்பியல் முதலாண்டு